# பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6

ந.க. எண். 70536/F/S3/EMIS/2011 நாள் 05-03-2014

பொருள்: பள்ளிக் கல்வித் துறை – கல்வித் தகவல் மேலாண்மை முறை (EMIS) – மாணவர்களின் ஆதார் எண்களை பெற்று இணையதளம் மூலம் உள்ளீடு செய்தல் – சார்ந்து.

பார்வை: மாவட்ட EMIS ஒருங்கிணைப்பு அலுவலர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்களால் தொகுத்து வழங்கப்பட்ட மாணவர்கள் விவரம்.

------

பார்வையில் காணும் மாவட்ட EMIS ஒருங்கிணைப்பு அலுவலர்கள் அளித்த மாணவர் விவரங்களின் மென்நகல் தொகுப்புகள் அனைத்தும் மாநில அளவில் ஒன்றாக தொகுக்கப்பட்டு மாணவ / மாணவியர்கள் சார்பாக உள்ளீடு செய்யப்பட்டுள்ள ஆதார் எண் சார்ந்து எடுக்கப்பட்ட தொகுப்பறிக்கையில் பல மாவட்டங்களில் ஆதார் எண்ணினை உள்ளீடு செய்யும் பணி மிகவும் மந்த நிலையில் உள்ளது அறியப்பட்டுள்ளது. எனவே, மாணவர்களுக்கு ஆதார் எண் வழங்கப்பட்டிருப்பின் அதன் நகலினை பெற்று இணையதளம் மூலம் கல்வித் தகவல் மேலாண்மை முறை (EMIS) இணையதளத்தில் உள்ளீடு செய்வது சார்பாக கீழ்கண்டுள்ள அறிவுரைகளை அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் வழங்குமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1) இணையதளத்தின் மூலம் மாணவர்களது ஆதார் எண்களை எளிய முறையில் உள்ளீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிவுற்றவுடன் இணையதளம் மூலம் மாணவ / மாணவியர்களுக்கான ஆதார் எண் உள்ளீடு செய்வது சார்ந்து சுற்றறிக்கை அனுப்பப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

www.kalvikural.com

(கு.பி.பா.)

2) சுற்றறிக்கை அனுப்பும் வரை பள்ளித் தலைமையாசிரியர்கள் சேகரித்த மாணவர்களின் ஆதார் எண் விவரங்களை **ஏற்கனவே வழங்கப்பட்ட EMIS offline மென்பொருளில் உள்ளீடு செய்ய வேண்டாம்** என தெரிவிக்கப்படுகிறது.

3) மேற்படி அறிவுரைப்படி ஆதார் எண் சம்பந்தமான விவரங்களை சேகரித்து சரிபார்த்து இணையதளம் மூலம் பதிவு செய்யும் விதமாக தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/—
வி.சி. இராமேஸ்வரமுருகன்
பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவர்கள்,
அனைத்து மாவட்ட கூடுதல் முதன்மைக் கல்வி அலுவர்கள்,
அனைத்து மாவட்ட மெட்ரிக் பள்ளிகள் ஆய்வாளர்கள்,
அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவர்கள்,
அனைத்து மாவட்டக் கல்வி அலுவர்கள்.

நகல்

மதிப்புமிகு பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலர் அவர்கள், தலைமைச் செயலகம், சென்னை—9.
மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை—6.
— தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.

நகல்

இயக்குநர் பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை – 6
இயக்குநர் தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை – 6
இயக்குநர் மெட்ரிக் பள்ளிகள் இயக்ககம், சென்னை – 6
திட்ட இயக்குநர், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கம், சென்னை—6.
திட்ட இயக்குநர், அண்ணா பல்கலை ஆராய்ச்சி பிரிவு (AUKBC), MIET Campus, சென்னை.

— தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் கனிவுடன் அனுப்பப்படுகிறது.

www.kalvikural.com